1. முதிர்வு தேதி/வங்கி கணக்கு விவரங்கள் கிடைக்கவில்லை அல்லது செல்லாதவையாக இருந்தால், NACH அல்லது வேறு எந்த மின்னணு முறையில் மீட்புத் தொகை செலுத்துதல் தோல்வியுற்று இருந்தால், எங்களது ஆர்டிஏ, கேபின் அவர்களால் பராமரிக்கப்படும் மற்றும்/அல்லது டெபாசிட்டரிகளால் ("NSDL and CDSL") அளிக்கப்படும் பத்திரதாரர்களின் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள பத்திரதாரர்களின் பெயரில் வாரண்ட்டுகள்/டிமாண்ட் டிராப்டுகளை வங்கி வழங்கும் மற்றும் பத்திரதாரரின் தனிப்பட்ட ரிஸ்கில் ஸ்பீடு/பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

   வங்கி செயல்முறையை சரியான நேரத்தில் ஆரம்பித்திருக்கும் வரை முதிர்வுத் தொகையில் கடன் பெறும் பத்திரதாரருக்கு ஏற்படும் எந்த தாமதத்திற்கும் வங்கி பொறுப்பேற்காது, முதிர்வு தேதிக்குப் பிறகு எல்டிஐபி–களில் எந்த வட்டியும் திரட்டப்படாது/செலுத்தப்படாது.
2. மீட்பு தொகை ("ஒரு பத்திரத்திற்கு வட்டி உட்பட) மீது வரி பிடித்தம் மற்றும் படிவம் 15ஜி/15எச் டெம்பிளேட்டுகளை பதிவிறக்கம் செய்வது குறித்த வழிமுறைகளுக்கு, தயவுசெய்து வங்கியின் இணையதளம் www.idfcfirstbank.comல் உள்ள 'முதலீட்டாளர்கள்' டேப்பில் பார்வையிடவும்.
3. பிராஸ்பெக்டஸில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளால் டிரான்ச் 3–எல்டிஐபி–களின் மீட்பு நிர்வகிக்கப்படும்.
4. அனைத்து தகவல் தொடர்புகளையும் மின்னணு முறையில் பெறுவதற்காக, உங்கள் மின்னஞ்சல் முகவரியை உங்கள் வைப்புத்தொகை பங்கேற்பாளர் (டிமேட் பத்திரதாரர்) அல்லது எங்கள் ஆர்டிஏ, கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (பிசிகல் சான்றிதழ் பத்திரதாரர்கள்) அல்லது வங்கியில் பதிவு செய்து புதுப்பிப்பதன் மூலம் 'பசுமை முயற்சியை' ஆதரிக்க அனைத்து பத்திரதாரர்களையும் நாங்கள் மனதார கேட்டுக் கொள்கிறோம்.

   கம்பெனிகள் சட்டம் 2013ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் திருத்தப்பட்ட முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திருப்பியளித்தல்) விதிகள் 2016(''விதிகள்'')ன்படி, 2011 (FY 2010–2011) மார்ச் மாதம் ஐடிஎப்சி லிமிடெட் வழங்கிய எல்டிஐபி–கள், மற்றும் தொடர்ந்து ஏழு (7) ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு பத்திரதாரர்களால் உரிமை கோரப்படாத வட்டி/ மீட்பு தொகை (அசல் மற்றும் வட்டி) வங்கியால் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தின் (''ஆணையம்'') டிமேட் கணக்கிற்கு மாற்றப்படும்.

பொறுப்பாகாமை மற்றும் அறிவிப்பு

ஒரு பொறுப்பான அமைப்பு என்ற வகையில், அனைத்து பத்திரதாரர்களிடமும் எச்சரிக்கையுடன் பேச விரும்புகிறோம்.

ஐடிஎப்சி பர்ஸ்ட் வங்கியின் பிரதிநிதிகள் அல்லது முகவர்களாக காட்டிக் கொள்ளும் எந்தவொரு அங்கீகரிக்கப்படாத அல்லது மோசடி ஏஜென்சிகள் அல்லது தனிநபர்களுடன் வர்த்தகத்தை கையாள்வதில் பத்திரதாரர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். எல்டிஐபி–க்காக ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் அத்தகைய முகவர்கள்/பிரதிநிதிகளை நியமிக்கவில்லை என்பதையும், மேற்கூறிய நபர்கள் அல்லது ஏஜென்சிகளுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் அத்தகைய பத்திரதாரர்களே தங்களது சொந்த ரிஸ்க் மூலம் மேற்கொள்கிறார்கள் என்பதையும், எந்தவொரு இழப்புக்கும் அல்லது சேதத்திற்கும் ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பேற்காது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து எங்கள் ஆர்டிஏ, கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (பிரிவு: ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க்–பத்திரங்கள்), செலினியம் டவர் பி, ப்ளாட் எண் 31 & 32, கச்சிபோவ்லி, நிதி மாவட்டம், நானக்ராம்குடா, செரிலிங்கம்பள்ளி, ஐதராபாத் 500 032, தெலுங்கானா, இந்தியா அல்லது கட்டணமில்லா எண்: 1800 345 4001ல் தொடர்பு கொள்ளவும் அல்லது einward.ris@kfintech.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். மாற்றாக, நீங்கள் எங்களை கட்டணமில்லா எண் 1800 266 0404 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் அல்லது ig@idfcfirstbank.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

நீங்கள் மேலும் மீட்புக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQs") அல்லது பத்திரங்களின் முதிர்வு தொடர்பான வேறு எந்த தகவலையும் பெற நீங்கள் வங்கி இணையதளம் www.idfcfirstbank.comல் உள்ள 'முதலீட்டாளர்' பிரிவை பார்வையிடலாம்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/– சதீஷ் கெய்க்வாட்
தலைவர் – சட்டம் மற்றும் நிறுவன செயலாளர்

இடம்: மும்பை
தேதி: ஜனவரி 07, 2021

TEJASSVI AAHARAM LIMITED

Registered Office: New No. 31, 1st Floor, Lazarus Church Road, R.A Puram, Chennai, Tamil Nadu, 600028, India
Tel:+91 44 48573911; Fax: NA; Email: taltdchennai@gmail.com; Website:www.talchennai.in
Corporate Identification Number: L15549TN1994PLC028672

Recommendations of the Committee of Independent Directors ("**IDC**") of Tejassvi Aaharam Limited (*Formerly known as Sterling Spinners Limited*) ("**Target Company**") in relation to the open offer ("**Offer**") made by **Mr. John Amirtharaj Henry("Acquirer 1")** and **Mr. G. Bakthavatsalu("Acquirer 2")** (Acquirer 1 and Acquirer 2 are hereinafter collectively referred to as "**Acquirers**"), to the public shareholders of the Target Company ("**Shareholders**") under Regulations 3(1) and 4 of SEBI (Substantial Acquisition of Shares and Takeovers) Regulations, 2011, as amended ("**Takeover Regulations**").

Date	January 07, 2021
Name of the Target Company	**Tejassvi Aaharam Limited** (*Formerly known as Sterling Spinners Limited*)
Details of the Offer pertaining to Target Company	The Offer is being made by the Acquirers in terms of Regulations 3(1) & 4 of the Regulations for acquisition of up **23,80,000** (Twenty Three Lakhs Eighty Thousand only) fully paid-up equity shares of face value of Rs. 10 each (**"Equity Shares"**), representing 34% of the Total Voting Share Capital of the Target Company from the eligible shareholders of the Target Company for cash at a price of Rs. **0.55/-** per equity share (the '**Offer**').
Name of the acquirer and PAC with the acquirer	**Acquirers** - Mr. John Amirtharaj Henry and Mr. G. BakthavatsaluThere are no PAC(s) with the Acquirers for the purpose of Open Offer.
Name of the Manager to the offer	**Saffron Capital Advisors Private Limited** 605, Sixth Floor, Centre Point, J.B. Nagar, Andheri (East), Mumbai - 400 059, India **Tel. No.**: +91 22 4082 0914-915, **Fax No.**: +91 22 4082 0999 **Email id:** openoffers@saffronadvisor.com **Website:** www. saffronadvisor.com **Investor grievance:** investorgrievance@saffronadvisor.com **SEBI Registration Number:** INM 000011211 **Contact Person:** Amit Wagle/Gaurav Khandelwal
Members of the Committee of Independent Directors (IDC)	1 Mr. K Alagiriswami Independent Non-Executive Director (DIN): 02524423 2 Mr. Vijaykumar Ramachandran Independent Non-Executive Director (DIN): 02532145 Chairman of IDC:- Mr. Vijaykumar Ramachandran
IDC Member's relationship with the Target Company (Director, Equity shares owned, any other contract / relationship), if any	All IDC Members are directors of the Target Company. Except for being directors of the company, they have no other relationship with the target company.
Trading in the Equity shares/other securities of the Target Company by IDC Members	None of the IDC Members have traded in the equity shares of Target Company during 12 months prior to the date of the Public Announcement of the Offer on November 06, 2020
IDC Member's relationship with the acquirer (Director, Equity shares owned, any other contract / relationship), if any.	None of the IDC Members holds any contracts, nor have any relationship with the Acquirers.
Trading in the Equity shares/other securities of the acquirer by IDC Members	Not Applicable, since Acquirers are individual.
Recommendation on the Open offer, as to whether the offer, is or is not, fair and reasonable	Based on the review, IDC Members believe that the Offer is fair and reasonable and in line with the Regulations.
Summary of reasons for recommendation	IDC Members have reviewed a) Public Announcement ("PA") dated November 06, 2020; b) Detailed Public Statement ("DPS") dated November 09, 2020 was published on November 10, 2020; c) Draft Letter of Offer ("DLOF") dated November 10, 2020; d) Letter of Offer ("LOF") dated December 29, 2020; and e) Corrigendum to DPS (CDPS) published onJanuary 07, 2021 Based on review of PA, DPS, CDPS, DLOF and LOF, the IDC Members are of the view that the Offer price is in line with the parameters prescribed by SEBI in the Regulations.
Any other matter to be highlighted	A) **Offer price related information for Shareholders** a) The Offer Price offered by the Acquirers is higher than the offer price which the promoters of the Target Company ought to have given to the public shareholders at the time of trigger of the open offer. In our view, the Offer price offered by the Acquirers for the current Open offer is justified and is beneficial to the public shareholders of the target company, since it is providing monetary benefits for the public shareholders who have been trapped because of no liquidity in the trading and also the fact that the fair market value of shares is negative. It will act as an exit option for all those public shareholders who do not wish to continue with the new incoming management. b) In case the earlier open offer was to be given to public shareholders along with accrued interest, the monetary benefits to the public shareholders would have been significantly lower compared to the monetary benefits offered by the present Acquirers. C) **Due to the Higher Offer price to be paid by the Acquirers, the earlier offer price has become infructuous and accordingly, the offer price of Rs. 0.55/- is justified.**

To the best of our knowledge and belief, after making proper enquiry, the information contained in or accompanying this statement is, in all material respect, true and correct and not misleading, whether by omission of any information or otherwise, and includes all the information required to be disclosed by the Target Company under the Regulations.

For and on behalf of the Committee of Independent Directors of
Tejassvi Aaharam Limited
Vijaykumar Ramachandran
Chairman of IDC

Place: Chennai
Date : January 07, 2021

எண்ணற்ற சாதனைகள், விருதுகள்

மக்களின் தேவை அறிந்து செயல்படும் அம்மாவின் அரசு: எடப்பாடி பழனிசாமி பேச்சு

ஈரோடு, ஜன.8–

மக்களின் தேவைகள் அறிந்து செயல்படும் அரசு அம்மாவின் அரசு என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

ஈரோடு மாவட்டத்தில் நேற்று பல்வேறு இடங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்தார். அப்போது அண்ணா தி.மு.க. அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்து சொல்லி இரட்டை இலைக்கு ஆதரவு திரட்டினார்.

முதலமைச்சர் பேசியதாவது:–

அம்மாவின் அரசு அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட், அனைத்து இல்லங்களுக்கும் 100 யூனிட் விலையில்லா மின்சாரம் வழங்குகின்ற முதல் மாநிலம் தமிழ்நாடு. இந்த வரலாற்றையும் அண்ணா திமுக தான் படைத்துக் கொண்டிருக்கிறது. நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு இந்தியாவிலேயே உயர்கல்வி பயில்பவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் தான் உயர்ந்திருக்கிறது. அம்மா 2011–ம் ஆண்டு பதவியேற்கும் போது 100க்கு 32 சதவிகிதம் பேர் தான் உயர்கல்வி பயின்று வந்தார்கள். அம்மா எடுத்த நடவடிக்கைகள் மற்றும் அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகவும் தற்போது 100க்கு 49 சதவிகிதம் பேர் உயர்கல்வி பயின்று வருகிறார்கள். ஆனால், ஸ்டாலின் இந்த ஆட்சியில் ஏதும் நடக்கவில்லையென்று கூறுகிறார். தமிழ்நாட்டில் 49 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 11 அரசு மருத்துவக் கல்லூரிகளையும் கொடுத்து சாதனை படைத்துள்ளோம். நான் முதலமைச்சரானவுடன், ஒரே ஆண்டில் 1,650 மருத்துப்படிப்பிற்கான புதிய இடத்தை உருவாக்கியுள்ளேன்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மூலம் ஏழை எளிய மக்கள் 2 லட்சம் ரூபாய் வரை தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொண்டு வந்ததை அம்மாவின் அரசு உயர்த்தி, தற்போது 5 லட்சம் ரூபாய் வரை தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம் என்று செயல்படுத்தி வருகிறது.

2.84 லட்சம் மகளிருக்கு ஸ்கூட்டர்

அம்மா உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று அறிவித்தார். அம்மாவின் அரசு, 25,000 ரூபாய் மானியத்துடன் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்தி அதன் மூலம் இதுவரை 2.84 லட்சம் மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஏழை, எளிய கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மகப்பேறு காலத்தில் ஆரோக்கியமாக இருப்பதற்காக வழங்கப்பட்டு வந்த நிதியுதவி 12,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாக உயர்த்தியது அம்மாவின் அரசு. திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ், தாலிக்காக வழங்கப்பட்ட நான்கு கிராம் தங்கம், 8 கிராமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்து, தற்போது 1 பவுன் தங்கம் சுமார் 37,000 ரூபாயாக உள்ளது, அதனையும் வாக்குறுதி அளித்தப்படி வழங்கி வருகிறது. அதேபோல, மாற்றுத்திறனாளிகளுக்கு ஸ்கூட்டர் வழங்குகிறோம்.



தேவை அறிந்து செயல்படும் அரசு

மகளிருக்கு, விவசாயிகளுக்கு ஏராளமான திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். விவசாயிகளுக்கு மானிய விலையில் டிராக்டர், பண்ணைக்குட்டை திட்டம், சொட்டுநீர் பாசன திட்டத்திற்கு மானியம் என மக்களுக்கும், விவசாயிகளுக்கும் தேவையானதை அறிந்து செயல்படுகின்ற ஒரே அரசு அம்மாவின் அரசு. அதிகளவில் வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கியதும் அம்மாவின் அரசுதான்.

தமிழ்நாடு முழுவதும் அதிகமாக கால்நடை மருத்துவமனைகள், மருந்தகங்களை தொடங்கிய அரசும் அம்மாவின் அரசுதான். 840 கால்நடை மருத்துவர்கள் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 3 இடங்களில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுயஉதவிக் குழுக்களிலுள்ள 1.07 கோடி மகளிருக்கு 80 ஆயிரம் கோடி வங்கி இணைப்புக் கடன் வழங்கியதும் எங்களுடைய அரசுதான். பெண்கள் சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்பதற்காகவும், பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதற்காகவும், கொரோனா நோய்த் தொற்றுக் காலத்தில்கூட வங்கி இணைப்புக்கடனாக சுமார் 12,000 கோடி ரூபாய் வங்கிகளின் மூலமாக வழங்கி இருக்கின்றோம்.

கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்த காரணத்தினால் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்டும் மக்களுக்கு அரசின் நிதியுதவி போதாது என்று நான் கேள்விப்பட்டவுடன் இரண்டரை லட்சம் வீடுகளுக்கு தலா 70,000 ரூபாய் உயர்த்தி தந்த அரசு எங்களுடைய அரசு.

விருதுகள்

சுகாதாரம், வேளாண்மை, உள்ளாட்சி, உயர்கல்வி, நீர் மேலாண்மை, சமூகநலம், போக்குவரத்து, எரிசக்தி என பல்வேறு துறைகளில் சாதனை படைத்து தேசிய விருதுகள் பெற்றுவருகிறோம். உள்ளாட்சித் துறையில் நூற்றுக்கு மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ளோம். வேளாண்மைத் துறையில் அதிகமான உணவு தானிய உற்பத்தி செய்து, சாதனை படைத்து தேசிய விருதான கிருஷி கர்மான் விருதினை 5 முறை தொடர்ந்து பெற்று வந்துள்ளோம்.

2006–ம் ஆண்டு முதல் 2011–ம் ஆண்டு வரை திமுக ஆட்சியில் கடுமையான மின்வெட்டு நிலவியது. ஆனால், இன்றையதினம் தமிழகம் மின்மிகை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. தடையில்லா மின்சாரம் தமிழகத்திலே கிடைக்கின்ற காரணத்தினாலேதான் புதிய, புதிய தொழிற்சாலைகள் வந்து கொண்டிருக்கின்றன.

அதிக தொழில் முதலீடுகள்

2019–ல் உலக முதலீட்டாளர் மாநாட்டை சென்னையில் நடத்தினோம். அதில் 304 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 3 லட்சத்து 5 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டது. அந்தப் பணிகள் எல்லாம் துவங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் 10.50 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

சட்டம் ஒழுங்கை பேணிக்காப்பதில் தமிழ்நாடு முதன்மையாக விளங்கி வருகிறது. திமுக ஒரு அராஜக கட்சி, அட்டூழியம் செய்யும் கட்சி, கட்டப்பஞ்சாயத்து செய்யும் கட்சி. அந்தக் கட்சி தேவையா? ஜாதி, மதச் சண்டைகள் இன்றி, அரசியல் அராஜகமின்றி தமிழகம் இப்போது அமைதியாக இருக்கிறது. இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

கொடிகாத்த குமரனுக்கு சென்னிமலையில் மணிமண்டபம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

ஈரோடு, ஜன.8–

தேசத்திற்காக பாடுபட்ட கொடி காத்த குமரனுக்கு சென்னிமலையில் மணிமண்டபம் கட்டப்படும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

ஈரோடு மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இதுகுறித்து கூறியதாவது:–

வீரமிகு தலைவன் தீரன் சின்னமலை இந்த மண்ணிலே பிறந்து மறைந்தாலும், கொங்குமண்டலத்திற்கு பெருமை சேர்க்கும் இடத்திலே பேசுவதை பெருமையாக கருதுகிறேன். வீரம் என்று சொன்னால் தீரன் சின்னமலை தான் நினைவிற்கு வருவார். தீரன் சின்னமலையின் புகழ் உயர்ந்திருக்கும் இந்த நிலையில், இந்த மண்ணில் பிறந்த சிலபேர் கொங்கு நாடு மக்கள் கட்சி என்ற பெயரில் அதன் தலைவராக இருக்கின்ற ஈஸ்வரனும், திமுகவோடு சேர்ந்து கூட்டணி வைத்திருக்கின்றார்.

கொங்கு பெயர் வைத்து தி.மு.க.வுடன் கூட்டணியா?

கூட்டணி வைத்திருப்பதில் தவறு இல்லை. ஆனால் கொங்கு என்ற பெயரை வைத்துக்கொண்டு திமுகவுடன் இடம்பெற்றது தான் தவறு. கட்சியின் பெயரை இவ்வாறு வைத்துக் கொண்டு, இந்த மக்களின் ஆதரவை பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். சமீபத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் திமுகவோடு கூட்டணி வைத்து நாமக்கல்லில் போட்டியிட்டீர்கள். வேட்பாளராக ஏ.கே.சி. சின்ராஜ் போட்டியிட்டார். அவர் தனி சின்னத்தில் போட்டியிடவில்லை. உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டார்.

கொங்கு நாடு மக்கள் கட்சி என்ற பெயரை வைத்துக் கொண்டு திமுக சின்னத்தில் நிற்கிறீர்களே, அதை தான் எதிர்க்கிறார்கள். நீங்கள் திமுகவில் உறுப்பினராக இருந்தால் திமுக சின்னத்தில் போட்டியிடலாம், தவறில்லை. உங்கள் கட்சி திமுக கட்சியா, கொங்கு நாடு மக்கள் கட்சியா என்று தான் மக்கள் கேட்கிறார்கள். ஆகவே, ஒரு சில சீட்டுகளுக்காக கட்சியை அடமானம் வைக்காதீர்கள்.

கொங்கு இன மக்கள் வீரம் செறிந்த மக்கள். உழைத்து வாழ்கின்ற மக்கள். சுயநலவாதிகளாக மாறி, பதவி சுகத்திற்காக பலியாகாதீர்கள். நீங்கள் தனி சின்னத்தில் நில்லுங்கள். இதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அண்ணா திமுகவில் இருப்பவர்களும் கொங்கு இன மக்கள் தான். கடந்த தேர்தலில் 234 தொகுதிகளிலும் ஒரே சின்னத்தை போட்டியிட வைத்த பெருமை புரட்சித் தலைவி அம்மாவை சாரும். இரட்டை இலை சின்னத்தில் 234 தொகுதிகளில் போட்டியிட்ட கட்சி அண்ணா திமுக. அப்படிப்பட்ட எங்கள் கட்சியை யாரும் குறை சொல்லி பேச வேண்டாம்.

கொடி காத்த குமரனுக்கு மணிமண்டபம்

தேசத்திற்காக பாடுபட்ட கொடி காத்த குமரனுக்கு புகழ் மேல் புகழ் சேர்க்கும் வகையில் சென்னிமலையில் அரசால் மணிமண்டபம் கட்டித் தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரவிருக்கும் சட்டமன்றப் பொதுத் தேர்தலில் கழக வேட்பாளர்களுக்கு இரட்டை இலைச் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யவேண்டும். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், அம்மாவின் சின்னம், கைத்தறி நெசவாளர்களின் சின்னம், விவசாயிகளின் சின்னம், தாய்மார்களின் சின்னம், உழைப்பாளிகளின் சின்னம் நமது சின்னம் வாக்களிப்பீர் இரட்டை இலைக்கு என்று சொல்லி, அண்ணா தி.மு.க. தான் ஏழை, எளிய மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை, தெருவிளக்கு, கழிவுநீர் வெளியேற்றும் வசதி என எண்ணற்ற வசதிகளை நிறைவேற்றும் அரசு அம்மாவின் அரசுதான்.

இந்த ஆட்சியில் மக்களுக்கு பஞ்சமே வராது. நன்றாக மழை பொழிகிறது. விவசாயிகள், வியாபாரிகள் மகிழ்ச்சியாக உள்ளனர். அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சியாக இருக்கின்ற ஆட்சி தொடர இரட்டை இலைச் சின்னத்திற்கு வாக்களிப்பீர்.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் தைப் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

IDFC FIRST Bank

ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

(முன்னர் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட் என்றிருந்தது)

பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர், 7வது தளம், எண். 1, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை–600 031. போன் : +91 44 4571 6400

கார்பொரேட் அலுவலகம்: நாமன் சேம்பர்ஸ், C–32, G–பிளாக், பந்த்ரா–குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கிழக்கு), மும்பை–400 051. போன் :+91 22 7132 5500 CIN: L65110TN2014PLC097792 | Website: www.idfcfirstbank.com

ஐடிஎப்சி லிமிடெட் (இப்போது ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டுக்கு மாற்றப்பட்டுள்ளது) மூலம் வெளியிடப்பட்ட டிரான்ச் 2 மீட்பு/முதிர்வு அறிவிப்பு – நீண்ட கால உட்கட்டமைப்பு பத்திரங்கள்

2010–11 நிதியாண்டில் ஐடிஎப்சி லிமிடெட்டினால் வெளியிடப்பட்ட டிரான்ச் 2 (தொடர் 1 & 2) நீண்ட கால உள்கட்டமைப்பு பத்திரங்கள் ("LTIBs") ஞாயிற்றுக்கிழமை, பிப்ரவரி 21, 2021 ("முதிர்வு தேதி")★ அன்று முதிர்ச்சியடைகிறது மற்றும் ஜனவரி 4, 2011 தேதியிட்ட பிராஸ்பெக்டஸின் விதிமுறைகளின்படி இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சனிக்கிழமை, பிப்ரவரி 06, 2021 ("பதிவு தேதி") அன்று பத்திரதாரர்களின் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள பத்திரதாரர்களுக்கு வருமானம் செலுத்தப்படும்.

(★ பிப்ரவரி 21, 2021 ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை என்பதால், அடுத்த வேலை நாளில் அதாவது திங்கட்கிழமை, பிப்ரவரி 22, 2021 கூடுதல் ஒரு நாளுக்கான வட்டியுடன் கட்டணம் செலுத்தப்படும்.]

டிரான்ச்–2ன் கீழ் வரும் ஒவ்வொரு தொடருக்கான (தொடர் 1 மற்றும் 2) முதிர்வு தேதியில் செலுத்த வேண்டிய மீட்புத் தொகை (ஒரு பத்திரத்திற்கு அசல் மற்றும் ஒரு பத்திரத்திற்கு வட்டி) விவரங்கள் வங்கியின் இணையதளம் www.idfcfirstbank.comல் கிடைக்கின்றன. மீட்பு மற்றும் வட்டித் தொகை TDSன் மொத்தமாகும் என்பதையும், பொருந்தும் வகையில் முதிர்வு வருமானத்திலிருந்து TDS கழிக்கப்படலாம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சம்பந்தப்பட்ட பத்திரதாரர்களுக்கு பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியில் டிரான்ச் 2 – எல்டிஐபி–களை மின்னணு முறையில் மீட்பது குறித்து வங்கி தனித்தனியாக ஒரு தகவல் கடிதத்தை அனுப்பியுள்ளது. வெள்ளிக்கிழமை, டிசம்பர் 25, 2020 அன்று எங்கள் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் ("ஆர்டிஏ") மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத பத்திரதாரர்களுக்கு மேற்சொன்ன தகவல் கூரியர்/ஸ்பீட் அஞ்சல்/பதிவுத் தபால் மூலம் காகித முறையில் அனுப்பப்பட்டுள்ளது.

உங்கள் பெயர், முகவரி அல்லது வங்கிக் கணக்கில் ஏதேனும் பொருந்தாத / மாற்றம் இருந்தால், வங்கியின் இணையதளம் www.idfcfirstbank.comல் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான வழிமுறைகளைப் பின்பற்றி தேவையான தகவல்களைப் புதுப்பிக்குமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். முதிர்வு வருமானத்தை உங்களுக்கு சரியான நேரத்தில் செலுத்த இது எங்களுக்கு உதவும்.

பத்திரங்களின் மீட்பு நடைமுறை தொடர்பாக பிசிகல் சான்றிதழ் பத்திரதாரர்கள் மற்றும் டிமேட் பத்திரதாரர்களின் கவனத்திற்கு கணக்கிடப்பட்ட புள்ளிகளில் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

1	பிசிகல் சான்றிதழ் பத்திரதாரர்கள்	மீட்புத் தொகையைப் பெறுவதற்கு மற்றும் முதிர்வு செயல்பாட்டின்போது அசல் பத்திர சான்றிதழை சமர்ப்பிக்க தேவையில்லை முதிர்வு வருமானம் முதன்மையாக NACH (நேஷனல் ஆட்டோமேட்டட் கிளியரிங் ஹவுஸ்) அல்லது வேறு ஏதேனும் மின்னணு முறையில் பணம் செலுத்தும் முறை மூலம் செலுத்தப்படும். வங்கி ஆணை, பெயர் மற்றும் முகவரி புதுப்பித்தல்/ மாற்றுவதற்கான டெம்பிளேட்ஸ் வங்கியின் இணையதளம் www.idfcfirstbank.comன் 'முதலீட்டாளர்கள்' டேப்பில் கிடைக்கின்றன.
2	டிமேட் பத்திரதாரர்கள்	புதுப்பிக்கப்பட்ட வங்கி கணக்கு விவரங்களுடன், டிரான்ச் 2–எல்டிஐபி–களை மீட்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட பதிவு தேதிக்கு ஒரு நாள் முன்னதாக, பிப்ரவரி 05, 2021 வெள்ளிக்கிழமைக்குள் உங்கள் டிமேட் கணக்கு நிலையை 'ஆக்டிவ் 'ஆக வைத்திருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பிற முக்கிய வழிமுறைகள்:

1. முதிர்வு தேதி/வங்கி கணக்கு விவரங்கள் கிடைக்கவில்லை அல்லது செல்லாதவையாக இருந்தால், NACH அல்லது வேறு எந்த மின்னணு முறையில் மீட்புத் தொகை செலுத்துதல் தோல்வியுற்று இருந்தால், எங்களது ஆர்டிஏ, கேபின் அவர்களால் பராமரிக்கப்படும் மற்றும்/அல்லது டெபாசிட்டரிகளால் ("NSDL and CDSL") அளிக்கப்படும் பத்திரதாரர்களின் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள பத்திரதாரர்களின் பெயரில் வாரண்ட்டுகள்/டிமாண்ட் டிராப்டுகளை வங்கி வழங்கும் மற்றும் பத்திரதாரரின் தனிப்பட்ட ரிஸ்கில் ஸ்பீடு/பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
   வங்கி செயல்முறையை சரியான நேரத்தில் ஆரம்பித்திருக்கும் வரை முதிர்வுத் தொகையில் கடன் பெறும் பத்திரதாரருக்கு ஏற்படும் எந்த தாமதத்திற்கும் வங்கி பொறுப்பேற்காது.
2. மீட்பு தொகை ("ஒரு பத்திரத்திற்கு வட்டி உட்பட) மீது வரி பிடித்தம் மற்றும் படிவம் 15ஜி/15எச் டெம்பிளேட்டுகளை பதிவிறக்கம் செய்வது குறித்த வழிமுறைகளுக்கு, தயவுசெய்து வங்கியின் இணையதளம் www.idfcfirstbank.comல் உள்ள 'முதலீட்டாளர்கள்' டேப்பில் பார்வையிடவும்.
3. பிராஸ்பெக்டஸில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளால் டிரான்ச் 2–எல்டிஐபி–களின் மீட்பு நிர்வகிக்கப்படும்.
4. அனைத்து தகவல் தொடர்புகளையும் மின்னணு முறையில் பெறுவதற்காக, உங்கள் மின்னஞ்சல் முகவரியை உங்கள் வைப்புத்தொகை பங்கேற்பாளர் (டிமேட் பத்திரதாரர்) அல்லது எங்கள் ஆர்டிஏ, கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (பிசிகல் சான்றிதழ் பத்திரதாரர்கள்) அல்லது வங்கியில் பதிவு செய்து புதுப்பிப்பதன் மூலம் 'பசுமை முயற்சியை' ஆதரிக்க அனைத்து பத்திரதாரர்களையும் நாங்கள் மனதார கேட்டுக் கொள்கிறோம்.
   கம்பெனிகள் சட்டம் 2013ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் திருத்தப்பட்ட முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திருப்பியளித்தல்) விதிகள் 2016(''விதிகள்'')ன்படி, 2011 (FY 2010–2011) பிப்ரவரி மாதம் ஐடிஎப்சி லிமிடெட் வழங்கிய எல்டிஐபி–கள், மற்றும் தொடர்ந்து ஏழு (7) ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு பத்திரதாரர்களால் உரிமை கோரப்படாத வட்டி / மீட்பு தொகை (அசல் மற்றும் வட்டி) வங்கியால் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தின் (''ஆணையம்'') டிமேட் கணக்கிற்கு மாற்றப்படும்.
   ஆணையத்திற்கு மாற்றப்பட்ட பத்திரங்கள் தொடர்பாக எந்தவொரு கோரிக்கையும் வங்கிக்கு எதிராக கோர முடியாது. எனினும், ஆணையத்திற்கு மாற்றப்பட்ட உரிமை கோரப்படாத பத்திரங்கள் மற்றும் வட்டி / மீட்பு தொகை (அசல் மற்றும் வட்டி) ஏதேனும் இருந்தால், விதிகளில் பரிந்துரைத்த நடைமுறையைப் பின்பற்றிய பின்னர் சம்பந்தப்பட்ட பத்திரதாரர்கள் ஆணையத்திலிருந்து திரும்பப் பெறலாம்.

பொறுப்பாகாமை மற்றும் அறிவிப்பு

ஒரு பொறுப்பான அமைப்பு என்ற வகையில், அனைத்து பத்திரதாரர்களிடமும் எச்சரிக்கையுடன் பேச விரும்புகிறோம்.

ஐடிஎப்சி பர்ஸ்ட் வங்கியின் பிரதிநிதிகள் அல்லது முகவர்களாக காட்டிக் கொள்ளும் எந்தவொரு அங்கீகரிக்கப்படாத அல்லது மோசடி ஏஜென்சிகள் அல்லது தனிநபர்களுடன் வர்த்தகத்தை கையாள்வதில் பத்திரதாரர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். எல்டிஐபி–க்காக ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் அத்தகைய முகவர்கள்/பிரதிநிதிகளை நியமிக்கவில்லை என்பதையும், மேற்கூறிய நபர்கள் அல்லது ஏஜென்சிகளுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் அத்தகைய பத்திரதாரர்களே தங்களது சொந்த ரிஸ்க் மூலம் மேற்கொள்கிறார்கள் என்பதையும், எந்தவொரு இழப்புக்கும் அல்லது சேதத்திற்கும் ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பேற்காது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து எங்கள் ஆர்டிஏ, கேபின் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (பிரிவு: ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க்–பத்திரங்கள்), செலினியம் டவர் பி, ப்ளாட் எண் 31 & 32, கச்சிபோவ்லி, நிதி மாவட்டம், நானக்ராம்குடா, செரிலிங்கம்பள்ளி, ஐதராபாத் 500 032, தெலுங்கானா, இந்தியா அல்லது கட்டணமில்லா எண்: 1800 345 4001ல் தொடர்பு கொள்ளவும் அல்லது einward.ris@kfintech.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். மாற்றாக, நீங்கள் எங்களை கட்டணமில்லா எண் 1800 266 0404 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் அல்லது ig@idfcfirstbank.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

நீங்கள் மேலும் மீட்புக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQs") அல்லது பத்திரங்களின் முதிர்வு தொடர்பான வேறு எந்த தகவலையும் பெற நீங்கள் வங்கி இணையதளம் www.idfcfirstbank.comல் உள்ள 'முதலீட்டாளர்' பிரிவை பார்வையிடலாம்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/– சதீஷ் கெய்க்வாட்
தலைவர் – சட்டம் மற்றும் நிறுவன செயலாளர்

இடம்: மும்பை
தேதி: ஜனவரி 07, 2021

பொது அறிவிப்பு

கீழே கொடுக்கப்பட்டுள்ள அசல் ஆவணங்கள் பற்றி பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது:

திருமதி ஷீபாசுதேவன் மற்றும் குமாரி ஷிபி வர்கீஸ் ஆகியோர் 2012 செப்டம்பர் 20-ம் தேதி எம். திருமாவளவன்-க்கு எழுதிக் கொடுத்த விற்பனை ஆவணம், ஆவண எண் 5120/ 2012

சென்னை - 600093 (தமிழ்நாடு) சாலிகிராமம், காந்திநகர் டாக்டர் அம்பேத்கர் தெருவில் பின்புறம் உள்ள வீட்டின் கதவு எண் 8/6, பிளாட் எண் 6, கதவு எண் 110 கொண்ட சொத்து தொடர்பாக இணை கடன் பெறுவோருடன் திருமாவளவன் மூலமாக இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட் இடம் கடன் கணக்கு எண் **HHLCHE00375907**-ன் கீழாக ஜாமீனாக கொடுத்து அடமானக் கடன் பெற்ற ஆவணம் குருகிராமில் உள்ள எங்கள் அலுவலகத்தில் வைத்து தொலைந்து விட்டது. மேற்சொன்ன அசல் ஆவணத்தை தேடிக் கண்டுபிடிக்க நாங்கள் செய்த அத்தனை முயற்சிகளும் வீணாகி விட்டன. **04.11.2020** அன்று ஆன்லைன் எஃப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விண்ணப்ப எண் **132270952000259** ஆகும்.

மேற்சொன்ன ஆவணத்தை யாராவது கண்டறிந்தால், அதனை **திரு சந்தன் சிங் நேகியிடம்** தெரிவிக்க/ ஒப்படைக்க வேண்டும் என்று இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது அல்லது அவரை எங்களது குருகிராம், பேஸ் 5, உத்யோக் விஹார், 448-451-ல் எங்கள் தலைமை அலுவலகத்தின் அவரது தொலைபேசி எண் **0124-6048036**-ல் தொடர்புகொள்ள கேட்கப்படுகிறது.

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: குருகிராம் இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பொது அறிவிப்பு

இதன் மூலம் அனைவருக்கும் தெரிவிப்பது யாதெனில், சென்னை–600 040, அண்ணா நகர் மேற்கு, E.W.S. வசந்தம் காலனி, 5வது தெரு, நெ.1941/1 என்ற விலாசத்தில் வசிக்கும் திரு. இரா. குமரேசன் அவர்களின் மனைவி திருமதி. கு. கஜலட்சுமி, அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் சார்பில் அறிவிக்கும் பொது அறிவிப்பானது என்னவென்றால்,

மேற்படி முகவரியில் உள்ள சொத்தானது மத்திய சென்னை பதிவு மாவட்டம், அமைந்தகரை தாலுக்கா, வில்லிவாக்கம் கிராமம், வசந்தம் காலனி, 5வது பிரதான சாலை, சர்வே எண்.51/3 B2 PART ANd 211/1 PART, 1008 சதுரடிகள் கொண்ட மனை மற்றும் வீட்டின் முழு உரிமையாளர், மேற்படி இவரின் தாயார் பெயரில் இருந்த கிரைய ஆவணத்தை (ஆவண எண்.2218/1997, வில்லிவாக்கம் சார்பதிவாளர் அலுவலகம்) கடந்த 22.09.2020 அன்று அமைந்தகரை Sky Walk சிக்னல் அருகே தொலைத்துவிட்டார். எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

எனவே இதன் மூலம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுப்பது என்னவென்றால் யாரேனும் பார்த்தாலோ அல்லது எடுத்து வைத்திருந்தாலோ இந்த அறிவிப்பு கண்ட 7 நாட்களுக்குள் எனது கட்சிக்காரரையோ அல்லது என்னையோ தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். அதன் பிறகு யாரேனும் மேற்படி பத்திரத்தை வைத்திருந்தாலோ வில்லங்கத்திற்கு உட்படுத்தினாலோ எனது கட்சிக்காரரை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் மேலும் அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி நடவடிக்கைக்கு உட்படுத்த நேரிடும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

T.Kowshik Raj, Advocate,
Chennai High Court Advocates,
Additional Law Building,
High Court, Chennai–600 104

டி.டி.கே. ஹெல்த்கேர் லிமிடெட்

பதிவு அலுவலகம் : எண். 6, கதீட்ரல் ரோடு, சென்னை 600 086
CIN No. L24231TN1958PLC003647 | Website : www.ttkhealthcare.com
Telephone No : 044 2811 6106 | Fax No : 044 2811 6387

அறிவிப்பு

டி.டி.கே ஹெல்த்கேர் லிமிடெட், எண்.6, கதீட்ரல் சாலை, சென்னை – 600 086, ஒவ்வொன்றும் ரூ.10/– பங்குகள் தொடர்பான பின்வரும் பங்கு சான்றிதழ்(கள்) கீழே குறிப்பிடப்பட்டுள்ள பங்குதாரர்(கள்) பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன, இழந்த/தவறாக/திருடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது, மேலும் இது தொடர்பாக நகல் பங்கு சான்றிதழ்(கள்) வழங்குவதற்கான விண்ணப்பம்(கள்) நிறுவனத்தால் பெறப்பட்டுள்ளன:

வ. எண்.	ஃபோலியோ எண்.	பங்குதாரர்களின் பெயர்	பங்குகளின் எண்ணிக்கை	சான்றிதழ் எண்.	தனித்துவமான எண்கள்	
					முதல்	வரை
1.	R00634	ராஜேஷ் அமிரிந்லால் ஷா	100 50	22030* 28329*	2710501 3609465	2710600 3609514

*நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 124 (6) மற்றும்அதற்கான விதிகள் மற்றும் பங்குதாரரால் கோரப்பட்ட பங்குகள் முதலீட்டாளர்களின் கல்வி மற